DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.54/2022**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.3
Defence
Court

Name : ராமச்சந்திரன்
Father/ Husband Name : ராமசாமி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தேவகோட்டையில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். சம்பவம் நடந்த 07.12.2020ம் தேதி காலை 10.00 மணி இருக்கும் நான் வெளியில் சென்றிருந்தேன். அ.சா.1 போன் செய்து சம்பவம் பற்றி எனக்கு சொன்னார். போனில் எதிர் வீட்டுக்காரர்கள் அடித்து விட்டதாகவும், இரத்தம் வருவதாகவும் சொன்னார். நான் வீட்டில் சென்று பார்த்த போது என் மனைவி காலில் இரத்தக் காயத்துடன் இருந்தார், என் குழந்தைகள் சிறு பிள்ளைகள் என்பதால் என் மனைவியை இராஜேஸ்வரியுடன் மருத்துவமணைக்கு அனுப்பிவிட்டு நான் பின்னால் மருத்துவமணைக்குச் சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவத்தைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அ.சா.1 தகவல் சொல்லி தான் வந்தேன். எத்தனை மணிக்கு அ.சா.1 போன் செய்தார்கள்

என்றால் காலை 10.00 மணிக்கு போன் செய்தார்கள். நான் எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் 10நிமிடத்தில் வந்துவிட்டேன். மருத்துவமணைக்கு யார், யார் சென்றோம் என்றால் இராஜேஸ்வரி முதலில் மனைவியுடன் சென்றார், பிறகு வீட்டை பூட்டிவிட்டு நான் சென்றேன். நான் மருத்துவமணைக்கு போகும் போது என் மனைவி பெட்டில் வைத்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

2. போலீசார் விசாரித்த பின்பு தான் மருத்துவர்கள் சிகிச்சை அளித்தார்களா என்றால் ஆமாம். இராஜேஸ்வரி மட்டும் தான் இருசக்கர வாகனத்தில் வைத்து என் மனைவியை அழைத்துச் சென்றார். எதிரிக்கும், எங்களுக்கும் இடையே முன்விரோதம் இருந்தது என்றால் எங்களுக்கு இடையே முன்விரோதம் ஏதும் இல்லை, எதிரிக்கும் அவர்களுடைய வீட்டு உரிமையாளருக்கும் பிரச்சினை இருந்தது, எதிரியின் வீட்டு உரிமையாளருக்கு நாங்கள் தான் சொல்லிக் கொடுத்ததாக எதிரி தானாகவே நினைத்து கொண்டார்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.